**செய்தி வெளியீடு எண்:129** **நாள்:21.05.2021**

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இன்று (21.05.2021) அந்தமான் மற்றும் வங்கக் கடலில் உருவாக உள்ள புயல் சின்னம் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு**

தெற்கு அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக் கடலில், தென் மேற்கு பருவமழை, முன் கூட்டியே 21.05.2021 அன்று துவங்க உள்ளது என்றும், 22.05.2021 அன்று, வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாக அதிக வாய்ப்புள்ளதாகவும், பின்னர் இது தீவிரமடைந்து அடுத்த 72 மணி நேரத்தில் புயல் சின்னமாக உருவாகக்கூடும் என்றும், இந்த புயல் சின்னம் வடமேற்காக நகர்ந்து மேற்கு வங்கம் – ஒடிஷா கடற்கரையை 26.05.2021 அன்று சென்றடையும் என்றும், சென்னையில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையத்தால் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, **மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இன்று (21.05.2021) மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.**

**இந்தக் கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் /**

**வருவாய் நிருவாக ஆணையர், திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர் முனைவர் என். சுப்பையன், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இணை இயக்குநர் திருமதி. த. ஜெயஷீலா மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.**

இந்திய வானிலை ஆய்வு மையத்தால் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வானிலை அறிக்கையில், காற்றின் வேகம், கடல் சீற்றம் மற்றும் மீனவர்களுக்கான எச்சரிக்கை குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காற்றின் வேகம் குறித்த எச்சரிக்கை**

- **21.05.2021** முதல் மணிக்கு **40** முதல் **50** கிலோ மீட்டர் வேகத்தில், அதிக பட்சம் மணிக்கு **60** கிலோ மீட்டர் வேகத்திலும்,
- இது மேலும், அதிகரித்து, **23.05.2021** முதல், மணிக்கு **50** முதல் **60** கிலோ மீட்டர் வேகத்தில், அதிகபட்சம் மணிக்கு **70** கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும்,

**கடல் சீற்றம் குறித்த எச்சரிக்கை**

- **21.05.2021** முதல் கடலின் சீற்றம் மிகுந்து காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை**

- **21.05.2021** முதல் தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகளிலும்,
- **23.05.2021** முதல் **25.05.2021** வரை, மத்திய வங்கக் கடல் பகுதிகளிலும்,
- **25.05.2021** முதல் **27.05.2021** வரை, வடக்கு வங்கக் கடல், மேற்கு வங்கம்– ஒடிஷா மற்றும் வங்கதேச கடற்கரைப் பகுதிகளிலும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஏற்கனவே மேற்சொன்ன ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் **23.05.2021–**க்குள் கரைக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**மழை தொடர்பான எச்சரிக்கை**

- **21.05.2021** அன்று, கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை முதல் மிக கன மழை பெய்யக் கூடும் என்றும், ஈரோடு, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும் கடலோர பகுதிகளில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும்,
- **22.05.2021** அன்று, தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும்,
- **23.05.2021** அன்று, நீலகிரி, தேனி, ஈரோடு, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் மற்றும் கடலோர பகுதிகளிலும் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும்,
- **24.05.2021** அன்று, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும்,
- **25.05.2021** அன்று, தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி மாவட்டங்களில் கன மழை முதல் மிக கன மழை பெய்யக்கூடும் என்றும், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான

மழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாக உள்ளது தொடர்பாக வரப்பெற்றுள்ள எச்சரிக்கையினைத் தொடர்ந்து, தேவையான அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டத்திலுள்ள வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை பார்வையிட்டு, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தேவை ஏற்படின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை அருகாமையிலுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும், ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் உடைப்பு ஏற்படாமல் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாக உள்ள நிலையில், ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் அனைவரும் **23.05.2021–**க்குள் கரைக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் அனைவருக்கும் Satellite Phones, NAVIC, NAVTEX ஆகிய தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் தகவல் தெரிவித்து அவர்கள் **23.05.2021–**க்குள் கரைக்கு திரும்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ள **45** நாட்டு படகுகளில், **20** படகுகளிலுள்ள மீனவர்களுக்கு கரை சேர்ந்துள்ளனர்.

எஞ்சியுள்ள 25 படகுகளில் உரிமையாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் உடனடியாக கரை திரும்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. பொது மக்கள் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். மேலும், பேரிடர் தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் TNSDMA TWITTER சமூக வலைதளத்திலும், TNSMART செயலி மூலமாகவும் வெளியிடப்பட்டு வருகிறது.

புயல் தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையத்தால் வெளியிடப்படும் அறிக்கைகள் உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு வருவதோடு, தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**